திருபுவனம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணைகள் பிறப்பிப்பவர் : திரு.வி.சிவலிங்கம்,

ந.க.எண்: 600 /2018 **நாள்: 23. 04. 2024**

பொருள் : மனைப்பிரிவு – பேரூராட்சி நிர்வாகம் – தஞ்சாவூர் மாவட்டம் – திருபுவனம் பேரூராட்சி – பேரூராட்சி பகுதியில் புல எண். 559/2C2B இல் 33368.40 ச.அடி பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்பு மனைப்பிரிவில் அமையும் மனை எண். 1 முதல் 16 வரையுள்ள மனைகளுக்கு இறுதி ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :

1. அரசாணை எண்:138 வீட்டு வசதி மற்றும் நகாப்புற வளர்ச்சி துறை நாள்:04.06.2004
2. அரசாணை எண்:18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 04.02.2019 மற்றும் அரசாணை எண்:16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 31.01.2020
3. அரசாணை எண்:141 வீட்டு வசதி மற்றும் மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை(UD4(3)) நாள் : 23.09.2020
4. அரசாணை எண்:181 வீட்டு வசதி மற்றும் மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை(UD4(1)) நாள் : 09.12.2020
5. அரசு கடிதம் எண்: 19113/நவ4(3)/2017–1, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள்: 30.08.2017
6. நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:13686/2017/ LA1, நாள்: 08.09.2017
7. அரசாணை எண்.79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்: 04.05.2017
8. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தஞ்சாவூர் அவர்களின் கடித ந.க.எண்.RCVUY 098 (6379) /2023 /TD4 2022 /TCP நாள் 15.06.2023
9. நகர் ஊரமைப்புத்துறை தஞ்சாவூர் வரைபட ஒப்புதல் எண்.ம.வ./ ந.ஊ.உ.இ (த.மா) எண்.SWP /25/2023
10. சார் பதிவாளர், திருவிடைமருதூர் வழிகாட்டு மதிப்பு
11. திரு.கே.சுகுமார், 108, தெற்கு வீதி, திருபுவனம் மனு நாள் 13.06.2018
12. திருபுவனம் பேரூராட்சி தீர்மான எண்.274 நாள்.11.03.2024
13. புல எண்559/2C2Bஇன் சந்தை மதிப்பு நாள் 22.04.2024
14. திருவிடைமருதூர் சார் பதிவகம் கணனி வில்லங்கச்சான்று நாள் 22.04.2024
15. பாரத மாநில வங்கி, திருவிடைமருதூர் செலுத்துச்சீட்டு எண். 20240423027460 நாள் 23.04.2024
16. இவ்வலுவலக செலுத்து சீட்டு எண். 12/2024–25 நாள்.23.04.2024
17. மற்றும் தொடர்புடைய ஆவணங்கள்

****

உத்திரவு :-

தஞ்சாவூர் மாவட்டம், திருபுவனம் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட திருபுவனம் கிராமம் நிலஅளவை எண். 559/2C2B இல் அமைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவில் 33368.40ச.அடி பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவில் அமைந்துள்ள 1 முதல் 16 வரையுள்ள மனைகளுக்கு பார்வை (8)இல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் தஞ்சாவூர் மண்டலம் அவர்களின் நடவடிக்கை கடிதம் எண். RCVUY 098 (6379) /2023 /TD4 2022 /TCP நாள் 15.06.2023இன்படி தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவிற்கு மேற்படி ஆணையில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு தஞ்சாவூர் மண்டலம், நகர் ஊரமைப்பு துறையால் ம.வ/ந.ஊ.து.இ(த.மா)எண். SWP /25/2023 என எண்ணிட்டு வரைபட ஒப்புதல் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கி பேரூராட்சி இறுதி ஒப்புதல் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

(I) மனுதாரர் அளித்துள்ள ஆவணங்களின் அடிப்படையில் இவ்வாணை பிறப்பிக்கப்படுகிறது. இப்பொருள் குறித்து மனுதாரரால் வழங்கப்பட்டுள்ள ஆவணங்களில் ஏதேனும் உண்மைக்கு புறம்பானது என்றோ, விதிமுறைகளை மீறியுள்ளது என்றோ பின்னிட்டு கண்டறியப்படின் இவ்வாணையினை மறு அறிவிப்பின்றி செயல் அலுவலரால் இரத்து செய்யப்படும் எனத்தெரிவிக்கப்படுகிறது.

(II) இம்மனையில் கட்டிடம் கட்டப்படும் நேர்வில் இதற்குரிய கட்டிட உரிமம்/அனுமதியினை உரிய கட்டணம் மற்றும் காலியிடவரி ஆகியவற்றை தனியே பேரூராட்சியில் செலுத்தி பெற்றுக்கொள்ள மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது. மேலும் தெருவிளக்கு அமைப்பதற்கு மின்சார வாரியத்தின் மதிப்பீட்டின் படியான தொகையினை மனைதாரரால் தனது சொந்த பொறுப்பில் செலுத்தி ரசீதினை பேரூராட்சியில் வழங்கப்பட வேண்டும்.

பேரூராட்சி அலுவலகம் தஞ்சாவூர் மாவட்டம் திருபுவனம்

செயல் அலுவலர்,
திருபுவனம் பேரூராட்சி,
தஞ்சாவூர் மாவட்டம்.

25/4/24

பெறுதல்

திரு.கே.சுகுமார்,
108, தெற்கு வீதி,
திருபுவனம்

நகல் : 1. நகர் ஊரமைப்பு துணை, இயக்குநர் தஞ்சாவூர் மண்டலம், கனபதி நகர், 2வது தெரு, மருத்துவக்கல்லூரி சாலை, தஞ்சாவூர்.
2. சார் பதிவாளர், சார் பதிவாளர் அலுவலகம், திருவிடைமருதூர்